**14.03.2024**

**HMOP. No. 60 / 2023 எ.ம.சா. நாகம்மை, க/பெ. நாச்சியப்பன்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

நாங்கள் வெளிநாட்டில் இருந்தபோது என் இளைய மகள் பூப்படையவே, அதற்கான விழாவினை சிறப்பாக நடத்தவேண்டுமென்று எனக்கும் என் கணவருக்கும் இடையில் பிரச்சனை நடந்ததா என்றால் இல்லை, அப்பொழுது கொரனா காலகட்டம். அது சம்பந்தமாக நான் துபாய் போலிசாரிடம் என் கணவர் மீது புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். ஆனால் என் மகளுக்கு ஆடை கூட வாங்கித்தர மாட்டேன் என்றதால் பிரச்சனை வந்தது. நான் விழாவினை சிறப்பாக நடத்த வேண்டுமென்று கூறியதற்கு என் கணவர் ஒப்புக்கொள்ளாததால் வந்த பிரச்சனைக்கு நான் பொய்யான புகார் கொடுத்து , அதில் போலிசார் என்னைதான் எச்சரித்து அனுப்பினர் என்றால் இல்லை. அதிலிருந்து நான் என் கணவரை சரியாக கவனிக்காமல் உணவு கூட கொடுக்காமல் இருந்துவந்தேன் என்றால் இல்லை, நான் சாப்பாடு கொடுத்தேன், அவர்தான் சாப்பிடவில்லை. பட்டமங்களத்தில் உள்ள பீரோவின் இரண்டு சாவிகளில் என்னிடம் உள்ள சாவியினை வைத்து நான் பட்டமங்களத்திற்கு வரும்போது அந்த பீரோவைத் திறந்து பயன்படுத்திக்கொள்வேன் என்றால் சரிதான், இருவரும் திறந்துகொள்வோம். வெளிநாட்டில் நான் உணவு கொடுக்காமல் இருந்த காலத்தில் என் கணவரையும் , குழந்தைகளையும் வீட்டிற்குள் வைத்து பூட்டிவிட்டு சென்று விட்டேன், பக்கத்தில் இருந்தவர்கள்தான் திறந்து விட்டார்கள் என்றால் இல்லை. ஒருமுறை நான் பூட்டியபோது காவல்துறையினர் வந்து திறந்துவிட்டனரா என்றால் இல்லை, என் கணவர் அழைத்ததின் பேரில் போலிசார் வந்து எங்கள் இருவரையும் கண்டித்தனர். காவல் துறை வந்து பூட்டி வைத்திருந்த என்னை எச்சரித்து சென்றனர், நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. இந்திய தூதரகத்தில் என் கணவர் மீது நான் புகார் செய்துள்ளேனா என்றால் பலமுறை செய்துள்ளேன். நான் வெளிநாட்டில் இருந்தபோது என் கணவருக்கு பலமுறை தொல்லை கொடுத்தேன், என் கணவரை பார்க்கவில்லை, என் கணவரிடமிருந்து பணம் வாங்கி ஆடம்பரமாக வாழ்வதில் குறிக்கோளாக இருந்தேன் என்றால் இல்லை. எனக்கு எழுத, படிக்க தமிழ் மட்டும்தான் தெரியும். 2021 , ஏப்ரல் மாதத்தில் விசா முடிந்து நானும், என் குழந்தைகளும் இந்தியா வந்தோம் என்றால் சரிதான். வரும்போது என் கணவரிடமிருந்து நகை, பணம் வாங்கி வந்தேன் என்றால் நான் வேலை செய்ததில்

வந்த பணத்தில்தான் கொஞ்சம் நகை வாங்கியும், பணத்தை வங்கிக்கு அனுப்பிவிட்டு வந்தேன், அதிலிருந்து கொஞ்சம் நகைதான் கொண்டுவந்தேன். நான் வேலை செய்து நகை வாங்கியதாக சொல்வதற்கு அதற்கான ரசீது என்னிடம் உள்ளதா என்றால் நான் பணமாக என் கணவரிடம் கொடுத்துவிடுவேன், அவர் கிரெடிட் கார்டு மூலமாக வாங்கிக் கொடுத்ததால் அவர் பணம் என்று சொல்கிறார். கிரெடிட் கார்டு மூலமாக மனுதாரர் அவரது பணத்தின் மூலமாகத்தான் வாங்கிக் கொடுத்தார், நான் என் சொந்த பணத்தை என் கணவரிடம் கொடுத்து வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்தியா வரும்போது என் கணவர் ரூ.1,05,000/– கொடுத்துவிட்டார் என்றால் ரூ.1,03,000/– கொடுத்துவிட்டார். நான் பேபி சிட்டிங் பார்த்ததாக சொல்வதற்கு அனைத்து மொழி குழந்தைகளும் இருப்பார்கள் என்றால் சரிதான், அதில் பெரும்பாலான குழந்தைகள் மலையாளிகளாக இருப்பர், எனக்கு மலையாளம் நன்றாக பேசத்தெரியும், ஆங்கிலம் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். எனக்கு தமிழ் மட்டும்தான் தெரியும், எனக்கு மலையாளமும், ஆங்கிலமும் தெரியும் என்று பேபிசிட்டிங் பார்த்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்தியா வரும்போது என் கணவர் என்னிடம் கொடுத்த ரூ.1,05,000/– பணமானது பிள்ளைகளின் படிப்பு செலவிற்கும், வீடு பிடித்து வீட்டு செலவினை பார்த்துக்கொள்வதற்காக கொடுத்தார் என்றால் ரூ.1,03,000/– கொடுத்தார், அதை வைத்து என் பெரிய மகளின் பள்ளிகட்டணம் செலுத்தினேன், வீட்டிற்கு சாமான் வாங்கினேன். நான் அந்த பணத்தில் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்காமல் , நான் நடத்தி வந்த நாகுவின் சமையல் என்ற யூ டியூப் சேனலிற்கு தேவையான பொருட்களை வாங்கி அனாவசியமாக நான் செலவழித்துவிட்டேன் என்றால் இல்லை. அதன் பிறகு மேலும் என் கணவரிடம் வீட்டு செலவிற்கு பணம் கேட்டு தொல்லை செய்தேன் என்றால் இல்லை. மீண்டும் என் கணவர் ரூ.2,70,000/– கொடுத்தனுப்பினார் என்றால் எனக்கு எதுவும் வரவில்லை. என் கணவர் ரூ.2,70,000/– ஐ என் வங்கி கணக்கு உள்ள கனரா வங்கியின் மூலமாக அனுப்பினார் , நான் அதனை வாங்கிக்கொண்டு இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் சரியல்ல. நான் இந்தியா வந்தபோது என் வங்கி கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்றால் ரூ.5 லட்சம் வரை இருந்தது, அவை அனைத்தும் பேபிசிட்டிங் மூலமாக நான் சம்பாதித்தது. எனக்கு பொன்னமராவதி கனரா வங்கி கிளையில் வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான். இந்த தொகையும் என் கணவர் என் வங்கி கணக்கில் போட்டதுதான், எனக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் கிடையாது, ஆனால் நான் மேற்கொண்டு தொகை கேட்டு மனுதாரரை தொந்தரவு செய்தேன் என்றால் இல்லை, நான் 2010 முதல் 2021 வரை பேபிசிட்டிங் பார்த்தேன். நான் இந்தியா வந்தபிறகு என் கணவர் பணம்

அனுப்பவில்லை என்று என் மாமியார் , நாத்தனார் மீது திருப்பத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் இந்த ரூ.1,03,000/–க்கு பிறகு எந்த தொகையும் கொடுக்கவில்லை, ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களுக்கு எந்த தொகையும் கொடுக்காததால் நான் கேட்கவே நான் வைத்திருக்கும் நகை, பணம், தான பத்திரத்தினை மாற்றிக்கொடுத்தால் பணம் அனுப்புவதாக சொல்லி செல்போன் எண்ணை பிளாக் செய்து வைத்ததால் புகார் கொடுத்தேன். என் கணவர் கொடுத்த ரூ.1,05,000/– , ரூ.2,70,000/– மற்றும் என் வங்கி கணக்கில் இருந்த ரூ. 5 லட்சம் அனைத்தையும்நான் வைத்துக்கொண்டு மேற்கொண்டு பணம் கேட்டு என் கணவரை தொல்லை செய்து , பொய்யான புகாரினை காவல் நிலையத்தில் கொடுத்து மனுதாரருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் மனஉளைச்சலை ஏற்படுத்தினேன் என்றால் இல்லை. இன்றையதேதி வரை என், குழந்தைகள் பராமரிப்பு, வீட்டு செலவு, குழந்தைகளின் பள்ளிப்படிப்பு செலவிற்கு என் கணவர் செய்துவருகிறார் என்றால் ஆகஸ்டு மாதம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபிறகுதான் செய்துவருகிறார். நான் யூடியூப் சேனல் வழியாகவும், பேபிசிட்டிங் மூலமாகவும் சம்பாதித்து பணம் ஈட்டியதாக சொல்வது பொய், அதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. என் எதிருரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் நான் மனுதாரருடன் வாழ்ந்தபோது மனுதாரரின் கொடுமைகளை தாங்கிக் கொண்டு மனஉளைச்சலுடன் வாழ்ந்துவந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் முதல் விசாரணையில் தாக்கல் செய்துள்ள டிஜிட்டல் ஆவணங்கள் அனைத்தும் நிரூபிக்கப்படாதவை , அதனால் அவை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதில் உள்ள குரல் பதிவுகள் எதுவும் மனுதாரரின் குடும்பத்தினருடைது கிடையாது என்றால் சரியல்ல. பட்டமங்களம் கிராமத்தில் பீரோவில் உள்ள பொருட்களை சாவியை பயன்படுத்தி நான் தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டேன், அந்த பொருட்களும், நகைகளும் பட்டமங்களத்தில் இல்லை, என் வசம்தான் உள்ளன என்றால் இல்லை. என் எதிருரையிலும், முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும் என் கணவர் சொல்லித்தான் என் மாமியார் வீட்டிலிருந்து பெற்றோர் வீட்டிற்கு சென்றதாக கூறுவது பொய், அவ்வாறு நான் கணவர் பேச்சைக் கேட்டிருந்தால் அவர் மன உளைச்சல் ஏற்பட்டு விவாகரத்து கோரி நீதிமன்றம் வந்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல. மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் அவருக்கு மன உளைச்சலும், மன வேதனையும் நான் ஏற்படுத்தியதால் மனுதாரருக்கு உடல் நிலை சரியில்லாத நிலைக்கு கொண்டு சென்றுள்ளதால் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்கள் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள காயமானது நான் என் கணவரை கடித்ததால் ஏற்பட்டது என்றால் இல்லை. (ஏற்கெனவே

எதிர்மனுதாரர் மனுதாரரை கடித்ததாக குறுக்கு விசாரணையில் எழுப்பிய வினாவானது எதிர்மனுதாரரால் மறுத்துரைக்கப்பட்டுள்ளதாலும், இந்தப் புகைப்படமானது முன்னரே தாக்கல் செய்யவில்லை, இவ்வழக்கில் ஆவணமாகவும் இல்லை, புகைப்படமானது முழுமையானதாக இல்லை என்பதால் இவ்வினாவானது எழுப்ப இயலாது என எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞரால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது) .

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது, மறு விசாரணை இல்லை.**